# பாரதிதாசன்



- **இயற்பெயர்**: கனக சுப்புரத்தினம்
- **பெற்றோர்** : கனகசபை – இலக்குமியம்மாள்
- **ஊர்** : புதுச்சேரி
- **காலம்** : ஏப்ரல் 29, 1891 - ஏப்ரல் 21, 1964
- **சிறப்பு** : பாவேந்தர், புரட்சிக்கவி
- **பணி** : தமிழாசிரியர், கவிஞர்,
- **நூல்கள்** : இருண்ட வீடு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, தமிழியக்கம்.
- பாரதியார் மீது கொண்ட பற்றின் காரணமாக தம் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.
- பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு போன்ற புரட்சிகரமான கருத்துகளைப் பாடினார்.
- தமிழக அரசு பாரதிதாசன் நினைவாக வருடம் ஒரு கவிஞருக்கு பாரதிதாசன் விருது வழங்கி வருகிறது.
- திருச்சியில் பாரதிதாசன் பெயரில் பல்கலைகழகம் நிறுவப்பட்டுள்ளது.

# தமிழின் இனிமை

கனியிடை ஏறிய சுளையும் -- முற்றல்

கழையிடை ஏறிய சாறும்,

பனிமலர் ஏறிய தேனும், -- காய்ச்சுப்

பாகிடை ஏறிய சுவையும்;

நனிபசு பொழியும் பாலும் -- தென்னை

நல்கிய குளிரிள நீரும்,

இனியன என்பேன் எனினும், -- தமிழை

என்னுயிர் என்பேன் கண்டீர்!